Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸூ ஐப்பசி மீ 07 உ புதன்கிழமை (24 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 04 ஓசை 239

## குணமடைந்தவர்களை அழைத்துச் செல்லவும்

(பண்டத்தரிப்பு)

குணமடைந்துள்ள மனநோயாளிகளை பெற்றோர் அல்லது உறவினர் வந்து பொறுப்பேற்கும்படி தெல்லிப்பழை வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் தெரிவித்தார். தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை தற்போது சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. இதனால் சங்கானை (4ஆம் பக்கம் பார்க்க)

# திங்கள் இரவு மோதலில் 15 படையினர் பலி

## ஆறு புலிகள் வீரமரணம்

(தெல்லிப்பழை)

வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், மாவிட்டபுரம் பகுதிகளில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மோதலில் பதினைந்திற்கு மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம் மோதலில் ஆறு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர் எனவும் தெரியவருகின்றது.

வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், மாவிட்டபுரம் பகுதியில் நேற்றிரவு விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் பல மணிநேரமாக நடந்த சண்டையிலேயே இந்த இழப்புக்கள் ஏற்பட்டன.

இம் மோதலின்போது இராணுவத்தினர் கனரக வாகனங்களில் இருந்து தாக்குதலை மேற்கொண்டனர். அதேவேளை விமானப் படை விமானங்கள், ஹெலிகொப்டர்கள் என்பனவும் புலிகளின் நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டபோதும், புலிகள் இராணுவத்தினருடன் உக்கிரமாக மோதினர்.

இம் மோதலில் இராணுவத்தினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தினர் மோதலில் இருந்து பின்வாங்கினர்.

## மண்டைதீவில் குடியிருக்க மக்கள் அச்சம்

(தீவுப்பகுதி)

இராணுவ வெளியேற்றத்தின் பின்னர் மீளவும் மண்டைதீவிற்கு குடியேறச்சென்ற மக்கள் அப்பகுதி கடற் பிராந்தி (4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் இன்று முழுவடைப்பு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து இன்று இந்தியா முழுவதும் முழுவடைப்பு நடத்துமாறு பாரதீய ஜனதாக் கட்சி தலைமைப்பீடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## இரு புலிகள் வீர மரணம்

(தெல்லிப்பழை)

கட்டுவன் பகுதியில் நேற்றைய தினம் வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் ரேமன் (பருத்தித்துறை) என்பவரும், காங்கேசன்துறையில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடனான நேரடி மோதலில் கமலா (முல்லைத்தீவு) என்பவரும் வீர மரண (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரம், காங்கேசனில் மோதல்கள் தொடர்கின்றன

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையில் அமைந்திருந்த இராணுவ முகாமிலிருந்தும் மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலைப் பகுதியிலிருந்தும் கீரிமலையை நோக்கி நகர்ந்த இராணுவ வாகனங்கள் கடுமையான தாக்குதல்களை அடுத்துப் பின்வாங்கின.

இராணுவத்தினருக்கு உதவியாக கடலில் தரித்து நின்ற பீரங்கிப் படகிலிருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஹெலிகொப்டரிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டன. பொம்மர் விமானங்களும்தாக்குதலை மேற்கொண்டன. இதேவேளை மாவிட்டபுரம் பகுதியில் புலிகள் சினைப்பர் கண்ணிவெடித் தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மற்றும் பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. இந்த சம்பவத்தில் இராணுவத்தினரின் வாகனம் சேதமாக்கப்பட்டதாகவும் அறியமுடிகிறது. (ச)

### வேம்படி மகளிர் கல்லூரி

## நூலகப் புத்தகங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அரிய நூற்றுக் கணக்கான பழம்பெரும் புத்தகங்கள் வெள்ளத்தில் இடந்து நாசமாகிப் போகும் நிலைக்கு உள்ளாகி உள்ளது.

சிறிலங்கா விமானக் குண்டு வீச்சால் முற்றாகச் சேதமடைந்த யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் நூலகக் கட்டிடத்தில் ஏராளமான புத்தகங்கள் மூன்று அங்குலத்திற்கும் அதிகமாக தேங்கி நிற்கும் வெள்ளத்தில் தோய்ந்து காகி (4ஆம் பக்கம் பார்க்க)

## "போர்மண்ணில் புனிதத்தாய்"

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நிதிக்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை. கலாசாரப் பிரிவினரால் "போர் மண்ணில் ஓர் புனிதத்தாய்" என்ற நாடகம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (மு)

## அரியாலையில் ராஜசேகருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் நேற்றுமுன்தினம் வீரமரணமடைந்த ராஜசேகர் (விக்னேஸ்வரன் திருமலை) என்பவரின் புகழுடல் அரியாலை பிரதேச (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலைக்கு மின்சார விநியோகம் இல்லை

யாழ். போதனா மருத்துவ மனைக்கு நீர் மின்சாரம் விநியோகிப்பதற்குயாழ். மாவட்ட மின்சார சபை பிரதம பொறியியலாளர் திரு. கந்தசாமி மறுத்துள்ளார்.

இந்த வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் குழு ஒன்று இவரைச் சந்தித்து வைத்தியசாலைக்கு மின்விநியோகம் செய்யும்படி கோரிய போது இந்த மறுப்பு தெரிவிக்கப்பட்டது. மின்சாரம் விநியோகிப்பதனால் இருபது பீப்பா மின்மாற்றிக்குரிய எண்ணெய் தேவை என்றும் இவரால் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள (4ஆம் பக்கம் பார்க்க)

## கிணறுகளில் சடலங்கள்; குடிப்பதற்கு நீர் இல்லை

மண்டைதீவில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உள்ள குடிநீர் கிணறுகளில் இறந்தவர்களின் சடலங்களை இராணுவத்தினர் போட்டதன் விளைவே இக்குடிநீர் பஞ்சத்திற்கு காரணமாகுமென அறியமுடிகிறது. இது இவ்வாறு இருக்க பிரேதங்கள் உள்ள கிணறுகளை உடனடியாக மூடிவிடும்படி அண்மையில் சுகாதாரப்பகுதியினர் வேண்டுகோளொன்றை விடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)

## நேற்று முன்தினம் ஆறு புலிகள் வீரமரணம்

(தெல்லிப்பழை)

மாவிட்டபுரம், கட்டுவன், குரும்பசிட்டி ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் கடந்ததிங்கள் தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆறுபேர் வீரமரணம் அடைந்துள்ளனர். இவர்களில் ஒருவர் விடுதலைப்புலிகள் மகளிர் படைப்பிரிவைச் சேர்ந்தவர் ஆவர்.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலில் திலீப் (சண்முகராசா சிறிதரன் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி) ராஜசேகர் (விக்கினேஸ்வரன், கும்புறுப்பிட்டி திருமலை) மதுபாலன் (தொண்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## சங்கானை ஆஸ்பத்திரியில் பல்வேறு குறைபாடுகள்

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பலவிதமான குறைபாடுகள் நிலவுவதாக அறிய வருகிறது. நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கான 'அம்புலன்ஸ்' வாகனங்கள் பற்றரி சரியாக இல்லாமையாலும் எரிபொருள் இன்மையாலும் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் உள்ளது எனச் சொல்லப்படுகின்றது. அதே வேளையில் கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உரிய கப்பியோ, கயிறோ கூட இல்லையாம். மேலும் அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் அம்பிசிலின் உட்பட பல வகை மருந்துகளும் கையிருப்பில்இல்லாததோடு மருந்து எழுதும் கடுதாசிக்குக்கூட தட்டுப்பாடு நிலவுகிறதாம். பிரசவவார்ட்டில்தங்கியிருக்கும் தாய்மார்கள் அயலிலுள்ள வீடுகளையே தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டியிருப்பதோடு இலாம்பு முதலான பொருள்களையும் தாமே (4 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள்கள் அதிகவிலையில் விற்பனை

(கொழும்புத்துறை)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இருபாலைக் கிராமசேவையாளர் பகுதியில் உள்ள மக்கள் இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்களை நல்லூர் உத்தரவுபெற்ற வியாபாரியிடம் பெற்றபோது விலை கூட்டி விற்கப்பட்டதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கட்டுப்பாட்டு விலை 40 ரூபா 40 சதம் விற்கவேண்டிய லக்ஸ்பிறே பைக்கற் ரூபா 45 தொடக்கம் 50 ரூபா வரையும், ஒரு கிலோ வெள் (4ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதிக்கு அடுத்து வரும் உணவுப் பொருள் விநியோகம்

-யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறைக்கு அடுத்த கட்டமாக கொண்டு வரப்படும் உணவுப் பொருள் தொகுதியினை ஊர்காவற்துறை நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதமளவில் சிறிலங்கா இராணுவம் தீவுப் பகுதியில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து நெடுந்தீவு, ஊர்காவற்துறை ஆகிய பகுதிகள் உட்பட பொதுவாக தீவுப் பகுதி மக்கள் மத்தியில் பட்டினி நிலை ஏற்பட்டு மக்கள் பலர் உயிரிழப்பிற்கு உட்பட வேண்டி ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்தும் (4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல: 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறு கால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B-1459)

### டில்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1510)

### நியூ வீனஸ் NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B/1509)

### இடமாற்றம்

அம்பிகாபதி பென்சி கூட்ஸ் 66, பெரியகடை, யாழ்ப்பாணம். மேற்படி விலாசத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தைவாடிக்கையாளரின் பாதுகாப்பு கருதி 54, அம்மன் றோட், நல்லூரிற்கு (வீரமாகாளி அம்மன் கோயில் அருகாமை) மாற்றியுள்ளோம் என்பதை மீண்டும் அறியத் தருகின்றோம். (R/757)

### தேவை

வெற்றுச் சீமெண்ட் 'பாக்'குகள், கோழித்தீன் 'பாக்'குகள் லக்ஸ்பிறே றாப்பர் 'பாக்'குகள் தேவை.

-மில்க்வைற்

(B/1521)

# குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலை ஆரம்பம்

(கொழும்புத்துறை)

மானிப்பாயில் இயங்கிவரும் யாழ். அரசினர் வைத்திய சாலைப் பிரிவில் நீண்ட கால இடைவெளிக்குப் பின் குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தற்போது ஒன்றரை வயது வரை பாவிக்கப்படும் தடுப்பூசிகளே ஏற்றப்படுகின்றன என்றும், ஐந்து வயதில் ஏற்றப்படும் தடுப்பூசி மருந்து விரைவில் கொழும்பில் இருந்து வந்து சேரும் என்றும் வைத்தியசாலை அதிகாரி எமது நிருபருக்கு தெரிவித்துள்ளார். (24)

## சிற்றூரவைகள்

# நிவாரணம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்

(கிளிநொச்சி)

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் சரிவரக் கிடைப்பதை சிற்றூரவைகள் உறுதி செய்யவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைக்குழுவின் தலைவர் சிவா மாஸ்டர் (சிவபாதம்) சிவநகரில் சிற்றூரவை உறுப்பினர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கிராம முன்னேற்றச்சங்கங்கள் சரிவர மக்களுக்குச் சேவை செய்யவில்லை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிற்றூரவைகள் ஒரு சாதாரணமான அமைப்பு அல்ல. அது ஓர் முக்கியமான அமைப்பாகும்.

பாடசாலைகள், வைத்திய சாலைகள், கூட்டுறவுக் கடைகள் போன்றவை சரிவர நடைபெறவும் சிற்றூரவைகள் உதவவேண்டும்.

உங்கள் பகுதியின் அத்தியாவசியமான தேவைகளை அத்தியாவசிய சேவைக்குழுவிற்குத் தெரியப்படுத்தவேண்டும், உணவு உற்பத்திக்கு ஊக்கம் கொடுக்கவும் பாடுபட வேண்டும் என்றார்.

கிளிநொச்சி மேற்குப் பொறுப்பாளர் ரி. அத்தாரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார். (49)

## நலன்புரிக் கழகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கில் மக்கள் நலன்புரிக் கழகம் ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி அப் பகுதியின் சிற்றூரவையால் திறந்து வைக்கப்படவுள்ளது. மேற்படி கழகத்தில் சேர விரும்புவோர் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலயத்தில் சந்திக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## திரிசாரணர் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண திரிசாரணர்களுக்கான அவசர பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். சகல யாழ்ப்பாண திரிசாரணர்களையும் தவறாது சமுகம் அளிக்கும் படி மேற்படி கழகத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

## காவோலை அழுகிறது

போராடப் புறப்பட்ட
குருத்தோலையை......
காரோடும்
ஆசைகாட்டி......
மேல்நாடு அனுப்ப
எண்ணி......
மேல்லோகம் அனுப்பி
விட்டு
காவோலை
அழுகிறது......

- பைப்

## ஆயுள்வேத வைத்தியத்துறை விருத்தி- கலந்துரையாடல்

இடம்- பிரதேச சபைக் காரியாலயம், கொக்குவில்.

காலம்– 25. 10 90 வியாழக்கிழமை
காலை 9 00 மணி

அழைக்கப்படுவோர்-

சகல உள்ளூராட்சி மன்ற ஆயுள் வேத வைத்தியர்கள் யாழ் மாவட்டம்- மற்றும் இதில் ஆர்வம் கொண்டோர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சு. டிவகலாலா,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ் மாவட்டம்.

(B-1523)

உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு

- வீட்டு மின்னிணைப்புகள்
- பிளம்பிங் வேலைகள்
- வெல்டிங்
- மோட்டர் றிவைன்டிங்

மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்

41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.


(B/1481) பதிவு இல. 4376.

## தவறாது சமுகம் தரவும்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்விசார்ந்த, கல்வி சாராதபணியாளர்கள் அனைவரையும் எதிர்வரும் 26.10 90 வெள்ளிக்கிழமை ஐப்பசி மாத சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்காக தவறாது சமுகமளிக்குமாறு துணைவேந்தர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு 17 — 09 — 1971



அநியாய அழிப்பு 24 — 10 — 1987

செல்வன்

### இராசரெட்ணம் லக்ஷ்மணன்

(மோகன்)

யாழ். மத்திய கல்லூரி மாணவன்

திதி 20–10–1990


அன்புருவே! அகல்விளக்கே! அழியாத புது முகமே! நல்லூரான் கோயிலிலே நம்பிச் சரணடைய, வல்லூறுபோல வந்த வடநாட்டான் வேட்டுவைக்க, கல்லும் கசிந்துருக, கண்டவர்கள் நெஞ்சுருக, புல்லோடு களிமண்ணும் புலம்பியழ, உன் பாலூறு தேன்வாய் தரையில் மடிந்து ஆண்டு மூன்றாச்சே மகனே! உமது ஆத்மா சாந்தியடைய நல்லூரானை வேண்டுகின்றோம்.

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அம்மம்மா,
அண்ணன்மார், அக்காமார்,
அத்தான்மார், மருமக்கள்,
உறவினர்களும் மற்றும் நண்பர்களும்

(R. 760)

## 31ஆம் நாள் நினைவு அலைகள்



### கந்தையா சண்முகராஜா

[அருணா போக்குவரத்துச் சேவை]

மடியில் 4-4-32

மண்ணில் 24-9-90

வீட்டுக்கிரியைகள்: 24-10-90

காலமெல்லாம் உருக்குலைந்து
கடமையையே அணிசெய்து
சீலமிகு வாழ்வுதனை
நாம் பெறவே வழிவகுத்து
ஞாலத்தில் புகழ்வளர்த்த - எம்
நாயகனே இறைபாதம்
கோலமுற நீயமர
வல்லவனை இறைஞ்சுகின்றோம்!

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
24.10.90

— குடும்பத்தினர்

B.1520

## சிந்தனைக்கு

கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

— திருவள்ளுவர்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 24-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# முடிவிற்கு வராது இப் பயணங்கள்

எதிர்வரும் பதினொராம் திகதி இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ.கே குஜ்ரால், இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த கொழும்பு வரவுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அமைச்சர் ஒருவர் இலங்கையுடன் பேச்சுவார்த்தை நடத்த வருவது, நடத்துவது இது முதல் தடவையல்ல; இந்தியப் பிரதமர்கள் தொடக்கம் வெளியுறவுச் செயலாளர்கள், அதிகாரிகள் வரை இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தைநடத்தியுள்ளனர். ஆகையினால்இலங்கை இனப்பிரச்சினைபற்றி அவர்களுக்கு நாம் சொல்வதற்கொன்றுமில்லை. கடந்தகால தமது அனுபவத்தைக் கொண்டே அவர்கள் சிறிலங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றிச் சிந்திக்கலாம்.

மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி காலத்தில் இருந்து முன்னாள் பிரதமரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தி வரை இலங்கையின் இனப்பிரச்சினைக்குப் பல்வேறு தீர்வுகளை முன் வைத்தனர்.

இனப்பிரச்சினைத் தீர்விற்கென தொடங்கப்பட்ட சர்வகட்சி மாநாடு, திம்புப் பேச்சுவார்த்தை, பெங்களூர்ப் பேச்சுவார்த்தை, இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் எவையுமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவில்லை. இவையாவும் இந்திய அரசாங்கத்தாலே மேற்கொள்ளப் பட்ட முன் முயற்சிகளே.

இவற்றிற்கும் மேலாக 1989 இல் வடக்கு - கிழக்கு மாகாணசபையில் இருந்த தமது பொம்மைஆட்சியாளரைக் கொண்டு தனிநாட்டுப் பிரகடனம் செய்வித்தும் பார்த்தது. அதற்குத் துணையாக ஒரு படையைத் (தமிழ்த் தேசிய இராணுவம்) திரட்டவும் துணைபோனது, ஆனால் இந்தியாவின் மறைமுக மிரட்டலையோ அல்லதுபொம்மை அரசின் நேரடி மிரட்டலையோ சிறிலங்கா சட்டை செய்ய வில்லை, பணிந்து போகவுமில்லை. அது தனது இனவாதப் போக்கில் எந்தவித மாற்றத்தையும் செய்யவுமில்லை.

கடந்த காலத்தில் இந்தியாவின் முயற்சிகள் பயன் அளிக்காதது போன்றே ஐ கே. குஜ்ராலின் முயற்சியும் பயனளிக்கும் என்பதை நம்புவதற்கில்லை. ஏனெனில் சிறிலங்காவின் இனவாதப் போக்கு ஒரு புறமிருக்க, இந்திய மத்திய அரசாங்கம் என்றுமில்லாதவாறு இன்று மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது. எதிர்வரும் பதினோராம் திகதிவரைக்குமே இன்றைய பிரதமர் வி. பி. சிங்கின் அரசாங்கம் நிலைக்குமா? என்ற கேள்வி தற்போதைய இந்திய அரசியலில் நிலவுகின்றது.

இந்நிலையில் சிறிலங்கா வரப்போகும் வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ராலின் கோரிக்கைகள் சிறிலங்கா இனவாத அரசாங்கத்தின் செவிகளில் ஏறும் என்பதற் கில்லை. பலமான நிலையில் இருந்தபோதே கேட்காத சிறிலங்கா பலவீனமான நிலையில் இருக்கும்போது கேட்கும் என்பதற்கில்லை.

இவற்றைக்கொண்டு நோக்கும்போது ஐ.கே. குஜ்ராலின் விஜயம் இலங்கைத்தமிழர் விவகாரத்தில் எந்தவிதபயனும் ஏற்படுத்தப் போவதில்லை என்பது வெள்ளிடமலை. இதனால் இந்திய மத்திய அரசாங்கம் கடந்தகால நிகழ்வுகளையும் தற்கால சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு புதிய தீர்மானங்களை எடுக்க முன்வரவேண்டும்.

இன்று இலங்கைத்தமிழர் மத்தியிலும் சரி, தமிழ் நாட்டுத் தமிழர்கள் மத்தியிலும் கட்சிகள் மத்தியிலும் சரி இலங்கையில் தமிழர்களின் பாதுகாவலர்கள் விடுதலைப்புலிகள்தான்எனஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை விளங்கிக்கொண்டு மத்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு தார்மீக ஆதரவு கொடுத்து தமிழரின் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

அதைவிடுத்து சிறிலங்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கலாம் என இந்தியா எண்ணுமாயின் அது வீணான நேரவிரயமாகவே அமையும். அதாவது விழலுக்கிறைத்த நீராகவே அந்நேரம் செல்லும்.

# புதிர்களாய் மிளிரும் அரும்புகள்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தளவு உரையாடல்களி லிருந்தும் இது ஒரு பாடசாலைக் கட்டடம் என்றும், இங்கு இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றும் நான் ஊகிக் கலானேன். ஆனால் இவர்கள் யாரும் ஏன் இப்போதுமாணவர்கள் படிக்க ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்திற்கு வருவதில்லை எனக் கவலைப்படாதது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. பாடசாலைக்கு வந்தோமே, மாணவர்களுக்குப் போதித்தோமா எனச் சிந்திக்காமல் சம்பளத்தையும், செக் மாற்றுவது பற்றியும் கூடுதல் அக்கறை காட்டும் இவர்களுக்கு மாணவரின் வருங்காலம் குறித்து என்ன அக்கறை இருக்கிறது என்பதை யோசிக்க வியப்பாய் இருந்தது.

ஒரு சந்ததியின் வழிகாட்டிகளாகச் செயற்பட்டு, நல்லதொரு தலைமுறையை வளர்த்தெடுக்க வேண்டிய கடமையை பொறுப்பேற்று இருக்கும் இவர்கள் குறுகிய சொந்தச் சுயநல வட்டத்திலிருந்து விடுபடாமல் இருப்பதைக் கண்டுஎன்மனம் வெதும்பியது; வேதனை கொண்டது. எனது வயிற்றெரிச்சலை மேலும் கொட்டிக்கொள்ள வேண்டும் என்று எண்ணியோ என்னவோ அந்த மூக்குக் கண்ணாடி தன் குரலை உயர்த்தியது.

''இங்க சேர்! இப்பவேநேரம் பத்தரையாய்ப் போச்சு எல்லாரும் கையெழுத்துப் போட்டாச்சுத்தானே. பூட்டிப் போட்டு வெளிக்கிடுவமே' என்று கேட்டது என் செவிக்கு.

''ஓமோம். நானும்சந்தைக்குப் போய்த்தான் வீட்ட போகவேணும். வெளிக்கிடுவம்'' என்றார் மீசைக்காரர்.

''போற வழியிலதான் அந்தப் பிள்ளையின்ர வீடு. போய்ப் பார்த்திட்டுப் போவமே'' என்றது வெளிர் நீலப் புடவை.

''கட்டாயம்போய் கடைசி அந்தத் தாய் தேப்பனை யாவது பார்த்து ஆறுதல் சொல்லத்தானே வேணும்'' என்றார் வேட்டிக்காரர்.

★ ★ ★

திடீரெனப் படலையடியில் நாலைந்து பேரைக் கண்டதும் சுருட்டுக்கார ஆறுமுகம் விருட்டென எழுந்தார். சுருட்டுச் சுற்றிக்கொண்டிருந்த பாயை ஓரமாக ஒதுக்கிவிட்டு வரவேற்கத் தயாரானார். வாசலை நோக்கிக் குரைத்துக் கொண்டிருந்த நாயை விரட்டிக் கலைத்துவிட்டு 'வாருங்கோ, வாருங்கோ' எனக் கூறினார்.

## " சிட்டு "

'சுகந்தியின்ரை பள்ளிக்கூட வாத்திமார் வந்திருக்கினம்' எனக் கிசுகிசுத்தபடி அடுக்களைக்குள் அம்மாவிடம் ஓடிச்சென்றாள் சுகந்தியின் தங்கை சுகிர்தமாலா. முன் விறாந்தையிலேயே அங்குமிங்குமாய்க் கிடந்த நாற்காலிகளை ஒழுங்குபடுத்தி வந்தவர்களை உட்கார வைத்துவிட்டு திண்ணையில் குந்தினார் ஆறுமுகம்.

'நாங்கள் எல்லாம் கேள்விப்பட்டம்; எங்களுக்கும் சரியான கவலை. அவள சரியான கெட்டிக்காரப்பிள்ளை. உப்பிடிச் செய்வாளெண்டு நாங்கள் நம்பேல்லை' என்று கதையைத் தொடக்கினார் வேட்டிக்காரர்.

அமைதியாய் இருந்தார் ஆறுமுகம்.

'இப்ப ஏதோ இதிலை போயிட்டாள். இயக்கத்திலையும் சரியான கஷ்டம். எப்பிடியும் கொஞ்ச நாளையில திரும்பி வருவா. ஒண்டுக்கும் கவலைப்படாதையுங்கோ' மூக்குக் கண்ணாடி ஆறுதல் படுத்தும் தோரணையில் பேசத் தொடங்கியது.

'இப்ப என்ன ஆரும் கண்டவனோடையே ஓடிப் போனது. இயக்கத்துக்குத்தானே போனது, இப்ப இது எல்லாம் சகசம். ஒரு வீரமான பிள்ளைக்குப் பெற்றோராக இருக்கிறது பெருமைதானே' என்று அறிவுரை கூறத் தொடங்கினார் மீசைக்காரர்.

ஓமோம் என்று உதட்டை அசைத்த ஆறுமுகம் கூறத் தொடங்கினார்.''நீங்கள் எல்லாம் பெரிய ஆக்கள். படிச்ச மனிசர். நான் படிச்சது குறைவுதான். எண்டாலும் உங்களிலும் பார்க்க எனக்கு வயதுகூட, அனுபவமும் கூட. ஆனபடியால் குறைவிளங்கப் படாது. நான் முந்தி சுருட்டு வியாபாரம் செய்தனான். 58 இலை அடிவாங்கின தோடை கொழும்புக்குப் போறதை விட்டனான். 83 இற்குப் பிறகு கொழும்புக்காரரோடை வியாபாரம் செய்யிறதையே விட்டுப்போட்டன். ஆனபடியா என்ர பிள்ளை பிழை விட்டிட்டுது எண்டு நான் நினைக்கேல்லை. இப்படிச் செய்து போட்டாளே எண்டும் நான் கவலைப்படேல்லைஅதுக்காக பிள்ளைப்பாசம் இல்லாமல் நான் கதைக்கிறன் எண்டு நினைக்காதையுங்கோ' என்று கூறி முடித்தார். வந்தவர்களின் முகத்திலே இனம் புரியாத திகில் படர மௌனமாய் எழுந்துசெல்லலாயினர். நானும் சிறகை விரித்தேன்.

(யாவும் கற்பனையல்ல)

அரசியல் சாசனத்திற்காகவும் சட்டத்திற்காகவும்

# 'நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளேன்'

-வி. பி. சிங்

(டில்லி)

ராமஜென்மபூமி, பாபர் மசூதி பிரச்சினையை சமாளிப்பதில் அரசியல் சாசனத்தை நிலைநாட்டவும், சட்டப்படி நடக்கவும் நான் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயார் என்று இந்தியப் பிரதம மந்திரி வி. பி, சிங் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் நடந்த அனைத்து மாநில முதல்வர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் மக்களுக்கு ஆற்றிய உரையில் பிரதமர் வி. பி. சிங் இவ்வாறு தெரிவித்தார்.

வரலாற்றின் திருப்பு முனையில் நாடு இப்போது இருக்கிறது, அரசாங்கத்தை பாதுகாப்பது இப்போதைய விடயம் அல்ல, நாட்டைக் காப்பாற்றுவதுதான் முக்கியம் என்றும் வி. பி. சிங் கூறினார்.

அரசாங்கத்தைக் காப்பாற்றுவதா அல்லது நாட்டைக் காப்பாற்றுவதா என்று வந்தால், நான் நாட்டைத்தான் பாதுகாப்பேன் என்று அவர் கூறினார்.

சமய சார்பின்மை, நமது நாட்டின் முக்கிய அம்சம். ஆகவே நாட்டின் அரசியல் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படை நெறிகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது என்றும், இதன் பெயரால் ஏற்படும் பிளவுபடுத்தும் செயல்களை அனுமதிக்க முடியாது என்றும் கூறினார்.

இதேவேளை ராம ஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினை தொடர்பாக தேசிய ரீதியில் பொதுக்கருத்து ஒன்றை எட்டும் முகமாக ஏற்படுத்தப் பட்ட ஆறு முதலமைச்சர்கள் கொண்ட குழு நியமித்தமை குறித்து பாபர் மசூதி நிர்வாகக்குழு வரவேற்றுக் கருத்து வெளியிட்டுள்ளது.

ஆனால் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி குறிப்பிடும்போது அரசின் இந்த நடவடிக்கையானது பாபர் மசூதி நிர்வாகக் குழுவிடம் சரண் அடைவதாக உள்ளதாக இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் உள்விவகாரங்களில் அமெரிக்காதலையிடவேண்டாம்

-பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான்

(வாஷிங்டன்)

பாகிஸ்தானின் உள்விவகாரங்களில் அமெரிக்காவைத் தலையிட வேண்டாம் என்று அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை பாகிஸ்தானிய ஜனாதிபதி குலாம் இஷாக் கான் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இது தொடர்பாக ஜோர்ஜ் புஷ்ஷுக்குஎழுதியுள்ள கடிதத்தில் தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளார்.

57 கோடியே 30 லட்சம் டொலருக்கான அமெரிக்க கடன் உதவியை தேர்தலுடன் சம்பந்தப்படுத்த வேண்டாம் என அவர் கேட்டுக் கொண்டார்.

# பாகிஸ்தானில் இன்று பொதுத்தேர்தல் நடைபெறுகிறது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இன்று பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. 217 இடங்களுக்கான இந்தத் தேர்தலில் 25 கட்சிகள் போட்டியிடுகின்றன.

கடந்த மூன்று மாதத்திற்கு முன்னர் பெனாசிர் பூட்டோவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதன் பின்னர் நடைபெறும் பொதுத்தேர்தல் இதுவாகும்.

1413 வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். சர்வதேச நாடுகளில் இருந்து 40 பேர் இந்தத் தேர்தலின் கண்காணிப்புக் குழுவில் இடம் பெற்றிருக்கின்றனர்.

அத்துடன் பதற்றமுள்ள பிரதேசத்தில் குறிப்பாக சிந்து மாகாணத்தில் பெருமளவு இராணுவம் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறது.

# மின்சாரக் கம்பங்கள் முற்றாக சேதமுற்றுள்ளன

(தீவுப்பகுதி)

மண்டைதீவு, அல்லைப்பிட்டிப்பகுதிகளில் உள்ள மின்சாரக் கம்பங்கள் யாவும் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன.

கம்பங்கள் யாவும் அடியோடு அறுக்கப்பட்டு இராணுவ அரண்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மண்டைதீவு பகுதிகளில் வீட்டு மின் உபகரணங்கள், முற்றாக இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. (15)

# வி. பி. சிங் அரசாங்கத்திற்கான ஆதரவை பாரதீய ஜனதா விலக்கிக்கொண்டது

(டில்லி)

இந்தியாவின் தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு வழங்கி வந்த ஆதரவினை விலக்கிக்கொள்ளப்போவதாக பாரதீய ஜனதாக்கட்சி அறிவித்துள்ளது.

நேற்றுக்காலை பீகாரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான அடல் பிகாரி வாஜ்பாய் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

பீகாரில் ரதயாத்திரையை மேற்கொண்டிருந்த பாரதீய ஜனதாக்கட்சித் தலைவர் எல். கே. அத்வானி சமஷ்டிப்பூரில் வைத்துக் கைதானதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு அந்தக் கட்சியினால் வெளியிடப்பட்டது.

இதற்கு முன்பாக பாரதீய ஜனதாக்கட்சி ரதயாத்திரையை தடுத்தாலோ அல்லது அயோத்தியில் ராமர் ஆலயம் கட்ட அனுமதிக்கா விட்டாலோ தனது ஆதரவை விலக்கிக்கொள்ளப்போவதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை இந்தியப் பிரதமர் வி. பி. சிங் நேற்று நண்பகல் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனை சந்தித்து தமது அரசாங்கத்தின் நிலை பற்றி விளக்கினார். பெரும்பான்மை இல்லை என்பதையும் எடுத்துக் கூறினார்.

இதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வி. பி. சிங் தான் பிரதமர் பதவியில் இருந்து விலகப்போவதில்லை என்றும், பாராளுமன்றம்தான் தமது அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் தேசிய முன்னணிக் கட்சியின் தலைவர் என். டி. ராமராவ் கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கத்தின் கனிவான நடவடிக்கைகளை பாரதீய ஜனதாக்கட்சி நிராகரித்ததால் ஏற்பட்ட விளைவே எல். கே. அத்வானி கைதான நடவடிக்கை என்று குறிப்பிட்டார்.

அதேவேளை அடல்பிகாரி வாஜ்பாய் தலைமையில் பாரதீய ஜனதாக்கட்சிக் குழுவொன்று குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து தமதுமுடிவைஅறிவித்துள்ளது

## கிராமசேவையாளர் கூட்டம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராமசேவகர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்திற்கு கிராமசேவையாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்கப்படுகிறார்கள்.

## சந்திக்கவும்

(உரும்பராய்)

யாழ்.போதனா வைத்தியசாலை திருத்த வேலைகளில் பங்குபற்றுவதற்கு யாழ். மாவட்ட சாரணர்களும் திரிசாரணர்களும், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களும் வியாழன் காலை 8.00 மணிக்கு மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்ற திரு. எஸ். ஏகாம்பரநாதன் மாவட்ட உதவி ஆணையாளர் (சமுக சேவை) தொண்டர் சேவை ஆணையாளர் திரு இ சுவாமிநாதன், திரு. இ. தவகோபால் மாவட்ட உதவி ஆணையாளர் (அபிவிருத்தி நிதி) ஆகியோர்களை சந்திக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (32)

## அறுந்து தொங்கும் மின்சாரக் கம்பிகள்

(தீவுப்பகுதி)

தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் வேலணை, புளியங்கூடல் போன்ற இடங்களில் அறுந்து தொங்கும் மின்சாரக் கம்பிகளை மீண்டும் இணைப்பதற்கு இதுவரை இலங்கை மின்சாரசபை முன் வரவில்லையென பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள்.

இதே வேளை மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிகளில் மின் கம்பங்கள் இராணுவத்தினால் தறிக்கப்பட்ட நிலையில், அதன் மின் கேபிள்கள் தெரு ஓரங்களில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இவற்றை மின்சாரசபையினர் பொறுப்பேற்று எடுக்காது விடில் அவை திருட்டுப் போகக் கூடிய நிலையில் உள்ளன. (15)

## சங்கானை ஆஸ்பத்திரியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவர வேண்டியிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளர்களுடன் வைத்தியசாலையும் சங்கானைக்கு இடம்மாற்றப்பட்டிருப்பது தெரிந்ததே. (12)

# தலைவர்கள், முகாமையாளர்கள் கூட்டத்திற்கு சமுகம்தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களையும், பொது முகாமையாளர்களையும், நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் மாவீரர் நாள் ஏற்பாடுகள் குறித்து ஆராயும் கூட்டத்திற்கு சமுகமளிக்கும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவுப் பகுதிப் பொறுப்பாளர் மயூரன் கேட்டுக்கொள்கிறார்.

இக் கூட்டத்திற்கு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவு சங்க சமாசம், கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், யாழ். தேசிய கூட்டுறவுச் சபை ஆகியவற்றின் தலைவர்களையும், பொது முகாமையாளர்களையும் வருகை தரும்படி கேட்டுக்கொள்கிறார்.

# நிவாரணப் பொருள் வழங்கும் கால எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான மூன்றாம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம், 1500 ரூபாவுக்கு மேற்பட்டோருக்கான பணத்துக்கான இரண்டாம் கட்ட உலர் உணவு விநியோகம் ஆகியன வழங்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.லிங்கநாதன் அறிவித்துள்ளார்.

இலவச உலர் உணவு விநியோகம், பணத்துக்கான உலர் உணவு விநியோகம் அனைத்தையும் இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை அவர் கேட்டுக் கொள்கின்றார்.

## மண்டைதீவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் கடற்படைப் பீரங்கிப் படகுகள் அடிக்கடி நடமாடுவதனால் மீண்டும் வெளியேறி மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசலிலும், இப்பகுதி பாடசாலைகளிலும் அகதிகளாக தங்கியுள்ளனர். (15)

# புகையிரத ஓய்வூதியர்களுக்கு 4 மாதம் கொடுப்பனவு இல்லை

(யாழ்ப்பாணம்)

புகையிரதத் திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியங்கள் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை. இவ்வாறு இலங்கைப் புகையிரதத் திணைக்கள ஓய்வு பெற்றவர் நலன்புரிச் சங்கத்தின் வடமாநிலக் கிளை விடுத்த செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாநிலத்தில் இத்திணைக்களத்தில் ஓய்வூதியம் பெறும் சுமார் ஈராயிரத்துக்கு மேற்பட்ட முன்னாள் ஊழியர்கள் உள்ளனர். இவ்வளவு காலமும் இவர்களுக்கு நேரடியாகக் கொழும்பில் இருந்து வங்கிகள் மூலமாக கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஜூலை மாதத்தில் இருந்து இவர்களுக்குரிய வவுச்சர்கள் தானும் அனுப்பி வைக்கப்படவில்லை. தள்ளாத வயதிலும் இந்நிலைமை பற்றி அரசாங்க அதிபர் உட்படப் பல உயரதிகாரிகளுக்கும் இவர்களால் முறையிடப்பட்ட போதும் நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லையென தெரிவித்துள்ளனர்.

## குணமடைந்தவர்களை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் நோயாளருக்கான இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் பராமரிப்பு வேலைகள் சிரமமாக இருப்பதால் குணமடைந்த நோயாளிகளை வைத்தியசாலையில் சேர்த்தவர்களோ அல்லது உறவினர்களோ வந்து அழைத்துச் செல்லும்படி வைத்திய அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

## இலவச கண் சிகிச்சை முகாம்

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28- 10- 90 காலை 10.00 மணியளவில் இரண்டாவது தடவையாகஓர் கண் சிகிச்சை முகாமும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் வைபவமும் நடத்தப்படும். இச் சிகிச்சை முகாம் சித்தங்கேணியில் உள்ள லயன்ஸ் கட்டடத்தில் நடாத்தப்படும். மேலும் இந்த நிலையத்தில் உள்ள லயன்ஸ் இலவச வைத்திய சேவை நிலையத்தில் சகல நோய்களும் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மருந்து வகைகள் பிரதி ஞாயிறு தோறும் காலை 9.00 மணிக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இச் சேவையை உரியவர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு மேற்படி கழகத்தின் தலைவர் திரு. துரைசிங்கம் ரகு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இருபுலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்துள்ளனர். இவ் வீரவேங்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## நேற்று

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானாறு) ஜெயா(கனகராஜலதா வன்னிச்சி அம்பாள் கோவிலடி, வல்வெட்டித்துறை) கபிலன், நிர்மலன் ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (மு)

# வவுனியா மினிபஸ்சேவை; புதிய சுழற்சிமுறை

(கொழும்புத்துறை)

யாழ்- வவுனியா சேவையில் ஈடுபடுகின்ற சகல மினிபஸ்களிற்கும் புதிய சுழற்சிமுறை அட்டவணை ஒன்று அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வடபிராந்திய மினிபஸ் சங்கத்தலைவர் திரு. பொன். மதிமுகராசா தெரிவித்துள்ளார்.

இச்சேவையில் ஈடுபடுகின்ற மினிபஸ்களின் உரிமையாளர்கள் தங்களுக்குரிய சுழற்சிமுறை பற்றிய விபரங்களை வடபிராந்திய மினிபஸ்சங்கத்தின் தாவடியில் உள்ள தற்காலிகப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.

இதேவேளை சுழற்சிமுறையில் சேவையாற்றத் தவறும் மினிபஸ்களிற்கு பின்னர் சேவைக்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## நூலகப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தக் கப்பல்களாக மிதந்து கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருந்தது.

இதே நிலைமையே யாழ். மத்திய கல்லூரியின் நூலகத்தில் உள்ள புத்தகங்களுக்கும் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். (லோ)

## நிவாரண பொருள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளைப்பச்சை அரிசி 13 ரூபா விற்கவேண்டிய போது 13ரூபா 50 சதத்திற்கும், ஒரு கிலோ மா ரூபா 14. 25 சதத்திற்கு விற்கவேண்டியது ரூபா 14 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மக்கள் சொல்லொணாத்துயர்அடைந்துள்ள நேரத்திலும் இப்படியும் விலை கூட்டி விற்பதையிட்டு மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

மேற்படி விடயத்தைச் சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரிகள் கவனத்திற்கு எடுத்து கூட்டுறவுச் சங்கக்கிளைகள் மூலம் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க உடன் நடவடிக்கைகளைமேற்கொள்ளும்படி இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (24)

## அரியாலையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் நாளை காலை ஒன்பதுமணியில் இருந்து பன்னிரெண்டு மணிவரை பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின் வீரவேங்கையின் புகழுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். (மு)

## தீவுப்பகுதிக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப் பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை உயர்ந்த நிலையிலேயே இருந்து வந்தது. இதனால் அன்றாடம் தமக்குத் தேவையான பொருள்களை கொள்வனவு செய்வதற்கு தீவுப் பகுதி மக்கள் பல கஷ்டங்களை எதிர் நோக்கி வந்தனர்.

இந்த கஷ்ட நிலைகளை நிவர்த்தி செய்யும் முகமாக ஊர்காவற்றுறைக்கு 250 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்களும் நெடுந்தீவுக்கு 250மெ. தொன் உணவுப் பொருள்களுமாக வழங்கப்பட உள்ளது. (லோ)

## யாழ். வைத்தியசாலைக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞானம்ஸ் ஹொட்டல், அதனை அண்டியுள்ள சில கடைகள் போன்றவற்றிற்கு நேற்று முன்தினமும் நேற்றும் பல மணிநேரம் மின்சாரம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரம் இன்மையினால் இந்த வைத்தியசாலையில் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்த வேலைகள் தாமதிப்பதுடன் சத்திர சிகிச்சைக் கூடத்தில் உள்ள பல கருவிகளை பரீட்சித்துப் பார்த்து திருந்த வேலைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. (க)

## விமானங்கள் நோட்டம்

(சுன்னாகம்)

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, உடுவில், மானிப்பாய் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படை பொம்மர் விமானங்கள் நேற்று மாலை பலமுறை வட்டமிட்டு நோட்டமிட்டன. இதனால் இப்பகுதி மக்கள் பீதியடைந்தனர். ஆனால்இவை குண்டுத் தாக்குதல் எதுவும் நடத்தவில்லை. (க)

## காணவில்லை

## தம்பிப்பிள்ளை அருணாசலம்

தையிட்டியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை அருணாசலம் (வயது 73) என்பவரை 20. 10. 1990இல் இருந்து காணவில்லை. இவரை திருமதி த. சறோஜினிதேவி தேடுகின்றார். இவரைக் காண்பவர்கள் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயிலில் சேர்க்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: சுப்பிரமணியம் சிவகுமார்

(R/ 762)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.